வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු








Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 16.08.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 229 பக்கங்கள் : 12


## ஜனாதிபதித் தேர்தல்:

# போட்டிக் களத்தில் 39 வேட்பாளர்கள்!

கொழும்பு, ஓகஸ்ட் 16

**எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய 40 பேரில் 39 பேர் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். இதனால், வரும் ஜனாதிபதித் தேர்தலில் 39 பேர் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.**

சுயேச்சையாக போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய சரத்குமார குணரத் என்பவரே வேட்புமனு பத்திரத்தை சமர்ப்பிக்கவில்லை.

அங்கீகரிக்கப்பட்ட 39 வேட்பாளர்களில் 22 பேர் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களாகவும் ஒருவர் ஏனைய அங்கீகரிக்கப்படாத கட்சியை சேர்ந்தவராகவும் 16 பேர் சுயேச்சை வேட்பாளர்களாகவும் தகுதி பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

11

## ‘சங்கு’ சின்னத்தில் களமிறங்குகின்றார் தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்!

### ரணிலுக்கு சிலிண்டர் சின்னம்

கொழும்பு, ஓகஸ்ட் 16

தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு சங்கு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிலிண்டர் சின்னத்தில் களமிறங்கவுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். நேற்றைய தினம் வேட்புமனு தாக்கல் நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர்களின் சின்னங்கள் அறிவிக்கப்பட்டன.

இதன்படி, தமிழ்த் தேசியப்

11

## 21இல் கூடும் பாராளுமன்று

கொழும்பு, ஓக. 16

ஓகஸ்ட் மாத இரண்டாம் அமர்வு வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வை எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை மாத்திரம் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கடந்த வாரம் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற

11

## பேரம்பேசி மீண்டும் ஏமாறத் தயாரில்லை

### தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்



கொழும்பு, ஓக. 16

கடந்த காலங்களைப் போன்று பேரம்பேசி ஒருவர் ஜனாதிபதியாக ஆதரவு தெரிவித்து, மீண்டும் ஏமாறுவதற்கு நாம் தயாரில்லை. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற போட்டியிடும் வேட்பாளரல்லன் நான். எனது

11

## நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 16

தமிழ்நாட்டின் நாகபட்டினம் (நாகை) - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை இன்று வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகின்றது.

நாகபட்டினத்திலிருந்து இன்று முற்பகல் 10 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் சிவகங்கை கப்பல் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும். பின்னர், நாளை மறுநாள் சனிக்கிழமை காங்கேசன்துறையிலிருந்து முற்பகல் 10 மணிக்கு புறப்படும் அந்தக் கப்பல் பிற்பகல் 2 மணிக்கு நாகபட்டினத்தை சென்றடையும்.

இதனைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை முதல் அனைத்து

11

## பொதுமக்களின் சகாப்தத்தை உருவாக்க உறுதியளிக்கிறேன்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 16

“பொது மக்களின் சகாப்தத்தை உருவாக்குவேன் என்று உறுதியளிக்கிறேன். தேசத்தில் உள்ள அனைவரும் வளர்ச்சியின் பலன்களை அனுபவிக்கும் சூழ்நிலையை உருவாக்குவேன்,” என்று சஜித் பிரேமதாஸ

11



## மகாநாயக்க தேரர்களிடம் ஆசீர்வாதம் பெற்ற ரணில்!

கண்டி, ஓக. 16

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை நேற்று கையளித்த கையோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டி தலதா மாளிகைக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டதுடன், மகாநாயக்கர்களின் ஆசீர்வாதத்தையும் பெற்றார்.

தலதா மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, தியவதன நிலமே பிரதீப் நிலங்க வரவேற்றார்.

தலதா மாளிகையின் மேல்மாடிக்கு சென்ற ஜனாதிபதி, மத வழிபாடுகளில் ஈடுபட்டார். தலதா மாளிகைக்கு வருகை தந்திருந்த மக்களிடம் நலன் விசாரித்த ஜனாதிபதி அவர்களுடன் சிநேக பூர்வமாக கலந்துரையாடினார்.

11

## புலிகள் மீதான தடை நீடிப்பு; கனடாவை வரவேற்ற அரசு!

கொழும்பு, ஓக. 16

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்ட கனடா அரசாங்கம் அதன் மீதான தடையைத் தொடர்ந்தும் நீடித்துள்ளது. கனடாவின் இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் வரவேற்பதாக வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

11

## இந்திய சுதந்திர தினம் யாழிலும் கொண்டாட்டம்!



யாழ்ப்பாணம், ஓக. 16

இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு பலாலியில் உள்ள இந்திய அமைதிப் படையினரின் நினைவிடத்தில் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி

11

## எதிர்பார்க்கும் மாற்றம் எம்மாலேயே சாத்தியம்

### அநுரகுமார சொல்கிறார்



கொழும்பு, ஓக. 16

மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றத்தைத் தேசிய மக்கள் சக்தியால் மாத்திரமே ஏற்படுத்த முடியும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

11

## தேர்தல் திணைக்களம் தேநீர் கடை போன்றுள்ளது!

### விஜயதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 16

தேர்தல் திணைக்களம் தேநீர்க் கடை போல இருந்தது. தேர்தல்கள் ஆணைக்குழு ஒழுக்கத்தை பேணத் தவறியுள்ளது என்று ஜனாதிபதி வேட்பாளர்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளரை களம் இறக்குவதற்காக சிவில் சமூகத்தினரும் இரண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளைத் தவிர்ந்த மற்றைய ஏழு கட்சிகளும் பல்வேறு தடைகளையும் தாண்டி நகர்ந்து கொண்டிருக்க - அதற்கு எதிரான வர்களே தொடர்ந்து அந்த வேட்பாள ருக்காக பிரசாரம் செய்துகொண்டிருக் கின்றார்கள்.

கடந்த இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அப்போது ஆட்சியமைத்த சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் வேட்பாளர் பட்டியலில் கம்பஹா மாவட்டத்தில் பசில் ராஜபக்ஷவுக்கு அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் மேர்வின் சில்வா.

அப்போது அவர் அந்தக் கட்சியில் ஒரு பிரதி அமைச்சர். ஆனாலும் அவரின் அரசியல் சர்ச்சைகளே அவ ருக்கு அரசியலில் பிரபல்யத்தைத் தேடிக்கொடுத்தன. அதற்காகவே அவரும் எந்தநேரத்திலும் சர்ச்சைக் குரிய விடயங்களையே கதைத்துக் கொண்டிருப்பார்.

அரசியலில் இதுபோன்று சர்ச்சைக்குரியவர்கள் எப்போதும் பிரபலமாகவே இருப்பார்கள்.

இதனால்தானோ என்னவோ, இந்தத் தமிழ் பொதுவேட்பாளர் பற்றி அதற்கு எதிரானவர்கள் தொடர்ந்து செய்துவருகின்ற பிரசாரம், அந்த பொது வேட்பாளருக்கு சாதகமாகி வருவதாகவே தெரிகின்றது.

அவர் தேர்தலில் கடும் பிரசாரம் செய்யாமலேயே யாரும் எதிர்பாராத வாக்குகளைப் பெற்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்கிறார் நமது அரசியலில் நீண்டகாலம் தீவிர செயல் பாட்டாளராக பணியாற்றிய ஒருவர்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் விவ காரத்தில் ஏழு அரசியல் கட்சிகளும் எண்பதுக்கும் மேற்பட்ட சிவில் சமூக பொது அமைப்புகளும் சேர்ந்து உருவாக்கிய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பதினான்கு உறுப்பி னர்களையும் தற்போதைய ஜனாதி பதியும் - ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க முதலில் பேச்சுக்கு அழைத்தார். அப்போது அந்த பொதுக்கட்டமைப்பா கலந்துபேசி, அவரின் அழைப்பை ஏற்று பேச்சுக்கு போவதில்லை என்றும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் முறையான அழைப்பு கிடைத்தால் அப்போது அதுபற்றி பேசி முடிவெடுக்கலாம் எனவும் முடிவெடுத்தார்கள். ஆனால், அந்த அழைப்பை ஏற்று மூன்று அரசியல் கட்சிகள் ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு சென்றிருந்தன. அந்தச் சந்திப்புக்கூட, ஓர் அரசியல் ரீதியான சந்திப்பு அல்ல. அது நடைபெற்றது ஜனாதிபதி செயலகத்தில் - பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒரு ஜனாதிபதி அழைக்கின்றபோது அதனை நிராகரிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியான முடிவாக இருக்க முடியாது. தமது மாவட்டங் களின் தேவைகளுக்காக ஜனாதி பதியை சந்திக்கும் மக்கள் பிரதிநிதி கள், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுக்கொண்டதை பலரும் தமக்கு விரும்பியவாறு விமர்சித்து வருகின்ற னர்.

அந்தச் சந்திப்பில் அவர்கள் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் பிரதிநிதிகளாக கலந்துகொள்ள வில்லை. அவர்கள் அரசியல் கட்சி களின் பிரதிநிதிகளாக ஒரு ஜனாதி பதியின் அழைப்பை ஏற்று, ஜனாதிபதி செயலகத்தில் அவரை சந்தித்திருப் பதை எதற்காக விமர்சிக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதற்காக அவர்கள் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவிலிருந்து வெளியேறி விட்டனரென்று வேறு சிலர் எழுதி வருகின்றனர்.

அதனால்தானோ என்னவோ புளொட் தலைவர் சித்தார்த்தன், "ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் நிச்சயம் போட்டி யிடுவார். கடைசி நேரத்தில் பின்வாங் கப்போவதில்லை" என்று தெரிவித்தி ருந்ததுடன், தமிழ்ப் பொதுவேட்பா ளர் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயல்படுகின்றார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை யும் அவர் நிராகரித்திருந்தார்.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப் பின் இந்த முயற்சியை என்ன விலை கொடுத்தும் குழப்பிவிடவேண்டும் என்று நம்மவர்கள் சிலர் பம்பரமாக சுழன்று பணியாற்றிக் கொண்டிருக்க, இப்போது தெற்கிலிருந்தும் சிலர் தமது முயற்சியை தொடக்கியிருக்கின் றனர்.

பிரதான வேட்பாளர்களில் ஒருவ ரான ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் அவ ரின் தேர்தல் பிரசாரத்தை முன்னின்று கவனித்து வருபவருமான வஜிர அபேவர்த்தன கடந்த வாரம், முதலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலை வரும் எம்.பி.யுமான சி. வி. விக்னேஸ் வரனை தொலைபேசியில் அழைத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை யில் மெகா கூட்டணி ஒன்று அமைக்கப்படுவதாகவும் அதில் இணைந்துகொள்ள மூன்று தமிழ் கட்சிகள் இணக்கம் தெரிவித்திருக்கின் றன என்றும் (ஜனாதிபதியுடன் சந்திப்பில் கலந்துகொண்ட அந்த மூன்று கட்சிகளும்தான்) உங்கள் கட்சியையும் எமது கூட்டணியில் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றோம் எனவும் கூறியிருக்கிறார்.

இந்தத் தொலைபேசி உரையாட லைத் தொடர்ந்து, இவ்வாறு அவர் தன்னோடு பேசிய விடயத்தை உடனடியாகவே விக்னேஸ்வரன் பொதுக்கட்டமைப்பின் உறுப்பினர் களுக்கு மின் அஞ்சலில் தெரிவித்திருந் தார்.

பின்னர் அந்த மூன்று கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பெடுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆதரவு தெரிவித்துள் ளார் என்றும் அதன் அடிப்படையில் பொது ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவ தற்கு நீங்களும் இணங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அதனை நிராகரித்த அந்த மூன்று கட்சிகளும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாம் சந்தித்தது எமது மக்களின் நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவிப்பதற்கும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதில் அவருடைய அர்ப்பணிப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை தெரிந்து கொள்வதற்குமாகவே. மாறாக, அவருக்கு ஆதரவு தெரிவிப்ப தற்காக அல்ல என்பதை ஐக்கிய தேசி யக் கட்சியின் தவிசாளருக்கு அவர்கள் தெளிவாக தெரிவித்திருக்கிறார் கள்.

"நான் ரெடி நீங்கள் ரெடியா" என்பதுபோல, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் இரண்டு தரப்பினரையும் அணுகியிருக்கிறார். ஆனால், இதனை நமது அரசியல் ஆய்வாளர்கள் சிலர், பொதுக் கட்ட மைப்புக்குள் குழப்பம் என்று கதை யளந்து சுயஇன்பம் காண்கின்றனர்.!

- ஊர்க்குருவி.

## நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 16

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறிலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்ட பத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை செல்வி பானுப்பிரியா தில்லைமணி பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 16

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை முன்னிட்டு இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறிலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமா கும்.

நீர்வேலி செல்வக்கதிர்காமர் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவசிறீ. தியாக. மயூரகிரி குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் பிரதம அதிதியாக வும் வேலணை உதவி பிரதேச செயலா ளர் கணேசமூர்த்தி பார்த்தீபன் சிறப்பு அதிதியாகவும் பங்கேற்பர்.

இதில், ஆவரங்கால் நடராஜ இராம லிங்கர் அறநெறி பாடசாலை, நீர்வேலி சிறீ முருகன் அறநெறி பாடசாலை, புத் தூர் கன்னியர் வைரவர் அறநெறி பாட சாலை, நீர்வேலி சிறீ செல்வக்கதிர்காமர் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் வாத்திய சங்கமம் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித் துள்ளார். (ஐ)


## வடக்கு சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளராக சர்வானந்தன்!

யாழ்ப்பாணம், ஒக. 16

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளராக வைத்தியர் தி. சர்வானந்தன் நியமிக்கப் பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண பதில் ஆணையா ளர் ஓய்வுபெற்று சென்றிருந்தார். இதனால், ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பிரதி மாகாண ஆணையாளராக கடமை யாற்றி வந்த வைத்தியர் தி. சர்வானந்தன் அண்மையில் நியமிக்கப்பட்டார்.

அவருக்கான நியமன கடிதத்தை



வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி. எஸ். எம். சாள்ஸ் வழங்கி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஓகஸ்ட் மாதத்தின் முதல் 11 நாட்களில் 73,373 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு

கொழும்பு, ஒக. 16

நாட்டில் இவ்வருடத்தில் ஓகஸ்ட் மாதத்தின் முதல் 11 நாட்களில் 73,373 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள் ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரை யான காலப்பகுதிக்குள் 1,271,432 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளா நிலையில் அவர்களின் மொத்த எண் ணிக்கை 237,649 ஆகும்.

ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளி லிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பய ணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ள தாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

## பெண்ணொருவரின் சங்கிலி கொள்ளை!

முல்லைத்தீவு, ஒக. 16

முல்லைத்தீவு வண்ணாங்குளம் பகுதி யில் இருந்து வைத்தியசாலைக்குச் சென்ற பெண்ணை இருவர் வீதியில் வைத்து தாக்கிவிட்டு கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு வண்ணாங்குளம் கிரா மத்தில் இருந்து உண்ணாப்பிலவு வைத் தியசாலைக்கு மாதாந்த சிகிச்சைக்கு சென்ற வயோதிபப் பெண்ணை மோட் டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர் கள் தாக்கிவிட்டு கழுத்தில் அணிந்திருந்த 5 பவுண் தங்கசங்கிலியினை அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக முல்லைத் தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முல்லைத் தீவு பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக. 16

இளவாலை - வித்தகபுரம் - பொற் கலத்தம்பை செல்லப்பா செல்லக்குட்டி சாமியார் சிவாலய (விசாலாட்சி அம் பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயம்) மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.40மணி முதல் 10.30 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

சிவசிறீ இராம. பாலச்சந்திரக்குருக்கள் பிரதம குருவாக அமைந்து கும்பாபிசேக கிரியைகளை நடத்தி வைப்பார்.

21ஆம் திகதி புதன்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமா கும். மறுநாள் வியாழக்கிழமை மாலை 5 மணிமுதல் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தமுடியும் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
16.08.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆடி 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவு!

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியுமா? - அது சாத்தியமா? இவ்வாறான கேள்விகளுக்கு மத்தியில் கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக சிவில் சமூக அமைப்புகள் பல ஒன்றிணைந்து முன்னெடுத்த முயற்சி தற்போது வெற்றிபெற்றுள்ளது. பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்ககூட, "உங்களால் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முடியாது", என்று கூறி கொடுப்புக்குள் சிரித்துச் சென்றார். ஆனால், பலரும் புருவத்தை உயர்த்தும் வகையில் அது சாத்தியப்பட்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் ஒப்பீட்டடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அரசியல் நகர்வாக இதனைக் குறிப்பிட முடியும். இதேவேளை, ஒப்பீட்டடிப்படையில் ஆகக்கூடிய தமிழ்த் தேசிய கடசிகளை ஒரு நேர்கோட்டில் சந்திக்கச் செய்திருப்பதும் இதுதான் முதல்தடவை. இலங்கை தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் இணைந்து கொள்ளாதுவிட்டாலும்கூட, கட்சியின் பெரும்பான்மையினர் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் பல சிவில் சமூக அமைப்புகள், அரசியல் கருத்துருவாக்கிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பொதுச் சபை ஒப்பீட்டடிப்படையில் ஓர் ஆக்கபூர்வமான அரசியல் நகர்வை முன்னெடுப்பதில் ஆரம்ப நிலையில் வெற்றி பெற்றிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் தமிழ் மக்களுக்கு முன்னால் ஒரு புதிய தெரிவு இருக்கின்றது - அதாவது, தமிழ்ப் பொது வேட்பாளர்.

இதுவரையான, ஜனாதிபதித் தேர்தல்களின்போது தமிழ் மக்களுக்கு முன்னால் ஒரு தமிழ்த் தேசிய தெரிவு இருந்ததில்லை. இதுவரையில், தமிழ் மக்கள் தங்களின் அரசியல் உணர்வை வெளிப்படுத்துவதற்கான ஒரு களமாக பாராளுமன்றத் தேர்தல்களை மட்டுமே பயன்படுத்தி வந்திருக்கின்றனர். ஆனால், இம்முறை அப்படியல்ல - தமிழ் மக்களின் மனச்சாட்சியை உரசிப் பார்க்கும் நோக்கில் ஒரு தெரிவு உண்டு. அந்தத் தெரிவை உதாசீனம் செய்து தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க முடியுமா? தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள், தமிழ் மக்களை தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரை நோக்கி வாக்களிக்குமாறு கைகாட்ட முடியுமா?

இந்த விடயத்தை எந்த அடிப்படையில் நோக்கினாலும் தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவு தமிழ்ப் பொது வேட்பாளர் மட்டும்தான். வேறு எந்தவொரு நியாயமான தெரிவும் தமிழ் மக்களுக்கு முன்னால் இல்லை. இதேவேளை, தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக வசை பாடுபவர்கள் அனைவரும் ஏதோவொரு வகையில் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரின் வெற்றியை விரும்புபவர்களாகவே இருக்க முடியும். தாங்கள் விரும்பும் ஒரு தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் குழப்பமான கதைகளை சிலர் பரப்ப முயற்சிக்கின்றனர்.

தனக்கான, தனித்துவமான அரசியலை கட்டமைக்க முயற்சிக்கும் ஒவ்வொரு மக்கள் கூட்டமும் அதற்கான முயற்சிகளை முன்னெடுக்க பின் நிற்கக்கூடாது. அவ்வாறு பின் நிற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அந்த இனத்தின் தனித்துவத்தை இழக்க நேரிடும். இன்றைய கால கட்டத்தில் இரண்டு வகையான அரசியல் நெருக்கடிகளை தமிழ்த் தேசிய இனம் எதிர்கொண்டிருக்கின்றது. ஒன்று, மாறிவரும் சர்வதேச அரசியல் சூழலில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் விடயங்கள் அனைத்தும் பழங்கதையாகிக் கொண்டிருக்கின்றன. அடுத்தது, இலங்கைத் தீவில் இருப்பது பொருளாதார பிரச்னை மட்டும்தான் என்னும் அடிப்படையில் கொழும்பின் ஆட்சியாளர்கள் தமிழ்த் தேசிய இனப்பிரச்னையொன்று இல்லையென்பதை தமிழ் மக்களாகவே நம்பக்கூடிய சூழலை உருவாக்க முயற்சிக்கின்றனர். இவற்றுக்கு எதிரான ஒரு ஜனநாயக தலையீடுதான் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடாகும். இதனை எவ்வாறு தமிழ்த் தேசிய தலைமைகள் என்போர் நிராகரிக்க முடியும்.

## நல்லூரான் திருவடி - 8

# 'பாலைவனத்தின் பசும் புற்றரை!'

இ. யோகாம்பாள்
ஆசிரியை, கொழும்புத்துறை மகா வித்தியாலயம்

எங்கள் குருநாதர் கருணையே வடிவானவர். குரு என்பவர் கைமாறு கருதாதவர். தெய்வமாக வழிபட வேண்டியவர். நல்வாழ்வு வாழ வழி காட்டுபவர். இத்தகைய சற்குரு நாதரை அடைவது பிறவிப்பயனா கும்.



எங்கள் குருநாதர் கூறும் அறிவுரைகளில் சில, " மனம் குரங்கு போன்றது, குரங்கு போன்ற மனதை மாற்ற மனமுண்டு. அதுவே தெய்வ சிந்தனை, சிவத்தியானம். இந்த மருந்துக்கு பக்கபலமாக அதிக உணவு உண்பது, அதிக நித்திரை, அதிக வேலை என்பவை தவிர்க்கப்பட வேண்டும். இவற்றைப் பின்பற்றினால் சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் ஏற்படும். எனது குழந்தைப் பருவத்திலிருந்து சுவாமி யின் சகவாசம் எனக்குக் கிடைத்தது. எனது தாயார் என்னை கொழும்புத்துறை சைவ வித்தியாசாலைக்கு அழைத்துச் செல்லும் போது எதிரில் உள்ள இலுப்பை மரத்தடி யில் வீற்றிருந்த யோகசுவாமியைச் சுட்டிக்காட்டி, "இவர்தான் எங்கள் குருநாதர். உனக்கு யோகாம்பாள் என்ற பெயரை சுவா மியே சூட்டினார்" எனக் கூறினார். அத்து டன், "யோகரை எப்போதும் மனதில் நிறுத்தி கும்பிட வேண்டும்" என்று தெரிவித் தார்.

இன்னொரு தடவை எனது பேரனாருடன் போகும்போது சுவாமியைச் சந்திக்க நேரிட்டது. அப்போது எனது பேரனார் கூறினார், "1897ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரை கொழம்புத்துறை வீதியில் வெள்ளைக் குதிரை பூட்டிய வண்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் அழைத்து வந்தபோது, யோகர் சுவாமிகள் பின்நாட்களில் வாழ்ந்த கொழும்புத்துறை கொட்டிலுக்கருகிலிருந்த வீதிச் சந்தியில் இறங்கி விவேகானந்தர் கம்பீரமாக நடந்தார். அத்துடன், "இந்த இடம் பாலைவனத்தின் மத்தியில் அமைந்த பசும் புற்தரை" எனவும் விவேகானந்தர் கூறினார்.


இன்னொரு சம்பவம் என் மனதில் வருகின்றது. அன்றொரு நாள் சுவாமிகள் எங்கள் வீட்டு முற்றத்தில் சக்கர வண்டியில் அமர்ந்திருந்து ஒரு சிறு பாடலைப் பாடிய வாறு வந்து திரும்பிச் சென்ளார். அச்சமயம் எமது முற்றத்தினருகே நின்ற தென்னை மரமொன்று சரிந்து

வீழ்ந்தது. ஆனால் எமது வீட்டுக்கோ அல்லது எமக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

"பாரொடு விண்ணாய் பரந்தான் கண்டாய். பாவிப்பார் பாவம் அறுப்பான் கண்டாய்" என்பது, எமது முற்றத்திலிருந்த வாறு பாடிய பாடலாகும். யோகர் பாடிய அப்பாடலின் மகிமை கண்டு வியந்தோம்.

வேறொரு தினத்தில் அவரிடம் நான் பொதுத் தராதர பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் சென்றபோது, " நீ ஆங்கில பத்திரிகைகளை நன்றாக வாசிக்க வேண்டும்" என்று கூறி ஆசி வழங்கினார். அதன்பின்னர் ஓர் ஆங்கில ஆசிரியராக தொழிலை ஆரம்பித்து, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் பல்லாண்டுகள் பணி புரியும் வாய்ப்பைப் பெற்றேன்.

எங்கள் குருநாதர் யோகரின் இறுதி யாத்திரையின்போது அழகிய மலர்களால் செய்த பாடையில் அவரது புனித உடல் கொண்டு செல்லப்பட்டபோது அதன்




பின்னால் சிறியோர் பெரியோரென பலரும் தீப்பந்தங்கள் ஏந்தியும், சாம்பிராணியை பரவச்செய்தும் தேவார திருவாசக பாடல்களைப் பாடியும் சென்றனர். இதன் பின்னர் குருநாதரின் புனித உடல் அக்னி பகவானுடன் இரண்டறக் கலக்கும் ஒளிமயமான அக் காட்சியைக்கண்டு பரவசத்திலாழ்ந்தோம்.

தற்சமயம் யோகர் சுவாமிகளின் ஞாபகார்த்தமாக காங்கேசன்துறை வீதியில் சிவதொண்டன் நிலையம் விளங்குகின்றது. கொழும்புத்துறையில் கணக்கர் சந்திக் கருகாமையில் புங்கன்குள வீதியில் ஒரு மகளிர் இல்லம் அமைந்துள்ளது. தற்சமயம் ஹவாயில் யோகரின் அமெரிக்க சீடரான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் பெரு முயற்சியினால் கனடாவிலும் சிவதொண்டன் நிலையம் அமையப்பெற்று அங்கு யோகசுவாமிகளின் சிலையும் வைக்கப்பட்டுள்ளது.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 16 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 31
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்கள் அறியாமையே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப் போர் வந்து நீங்கும். கவனம் தேவையான நாள்.

**இடபம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவ ரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்க ளுக்கு உதவுவீர்கள். நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற் றுக் கொள்வீர்கள். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்த னையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங் கள் கை ஓங்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாய மும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்க ளின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக் கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப் பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனாங் களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தி யோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**தனுசு**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையா ளுங்கள். வாகனத்தை இயக்கும்போது அலைபே சியில் பேச வேண்டாம். உத்தியோகத்தில் விவா தம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டும்.

**மகரம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை அடைப்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடி வுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியா பாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக் கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள் வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக் கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

# கோட்டையில் இந்திய தேசிய கொடியை ஏற்றினார் முதல்வர்!



சென்னை, ஓக. 16
சுதந்திர தினத்தை முன் னிட்டு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைத்து பல்வேறு விருது களை வழங்கி வைத்தார் காங் கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தனுக்கு தகைசால் தமிழர் விருதை முதல்வர் மு. க. ஸ்டா லின் வழங்கினார்.

தொடர்ந்து டாக்டர் ஆ. ப. ஜெ.அப்துல்கலாம் விருது சந்தி ரயான் 3 திட்ட இயக்குநர் ப. வீரமுத்துவேலுக்கும், துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது நீலகி ரியை சேர்ந்த செவிலியர் ஆ. சபீனாவுக்கும் முதல்வர் வழங்கி னார்.

(ஐ)

# 'முதல்வர் மருந்தகம்' திட்டத்தை அறிமுகப்படுத்தினார் முதல்வர்!

சென்னை, ஓக. 16
"குறைந்த விலையில் மருந்து கள் கிடைக்கும் 'முதல்வர் மருந் தகம்' அமைக்கப்படும், முன் னாள் இராணுவத்தினர் தொழில் தொடங்க ரூ.1 கோடி வரை கட னுதவி வழங்க வகை செய்யும் 'முதல்வரின் காக்கும் கரங்கள்' திட்டம் தொடங்கப்படும்" என்பன உள்ளிட்ட அறிவிப்பு களை, சுதந்திர தின உரையில் முதல்வர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டார்.

இந்தியாவின் 78ஆவது சுதந்திர தின விழாவை முன் னிட்டு முதல்வர் மு. க. ஸ்டா லின், சென்னை - புனித ஜோர்ஜ் கோட்டை கொத்தளத்தில் கொடி யேற்றினார். தொடர்ந்து, அவர் உரையாற்றினார்.

அவரின் உரையில்,

இந்தியாவில் பிற மாநிலங் களை காட்டிலும் தியாகிகளை போற்றுவதில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. முதல்வர்கள் கொடியேற்றும் அதிகாரத்தை பெற்றுத் தந்தவர் முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி. சமூக மாற்றத்தை நோக்கி திராவிட மொடல் அரசு செயல்பட்டு வருகிறது.

அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை எளியோ ருக்கு, சிறப்பான சிகிச்சைகளும் தரமான மருந்துகளும் வழங் கப்பட்டு வருகின்றன. இந்நிலை யில், தனியார் மருத்துவமனை களில் சிகிச்சை பெறும் நடுத்த ரக் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.

நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்குத் தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதால், இவர்க ளுக்கு அதிக செலவுகள் ஏற்படு கின்றன. இதற்குத் தீர்வாக, பொதுப்பெயர் வகை மருந்துக ளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் இவர்க ளுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், முதல்வர் மருந்தகம் என்ற புதிய திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். வரும் பொங்கல் திருநாள் முதல் செயல்படுத்தப்படவுள்ள இந் தத் திட்டத்தின்கீழ், முதற்கட் டமாக 1000 முதல்வர் மருந்த கங்கள் திறக்கப்படும் - என்று கூறினார்.

(ஐ)

# கச்சதீவை விட்டுக் கொடுத்ததால் மீனவர் உரிமை மறுக்கப்பட்டுள்ளது!

## தமிழ்நாடு ஆளுநர் ரவி



சென்னை, ஓக. 16
"கச்சதீவு உரிமையை விட்டுக் கொடுத்ததால் நமது மீனவர்க ளின் உரிமை மறுக்கப்பட்டுள் ளது", என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள் ளார்.

ஆளுநர் மாளிகையில் தேசப் பிரிவினை கொடூரங்களின் நினைவுதினம் கடைப்பிடிக்கப் பட்டது. இந்த நிகழ்வை தொடக்கி வைத்து உரையாற்றி யபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அத்துடன், "வரலாற்று அடிப்படையில் கடந்த காலத்தை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். பாரதம் வன்முறை நாடாக்கப்பட்டு, பல கொடூரங் கள், நாட்டு பிரி வினையால் நடந்தன.

பாகிஸ்தான், ஜம்மு காஷ்மீ ரில் பெரும்பகுதி ஆக்கிரமித் தது. அதை மறந்துவிட்டோம். 30 ஆயிரம் சதுர கி.மீ. அளவுக்கு சீனா ஆக்கிரமித்துள்ளது.

1947இல் ஏற்பட்ட பிரி வினை இன்னும் முடியவில்லை. தற்போதும் நடக்கிறது. இருப் பிடம், மொழி ஆகியவற்றின் மூலம் மக்கள் மனதில் பிரிவி னையை உண்டாக்குகின்றனர். பல சித்தாந்தங்கள் பிரிவினையை ஆதரித்தன.

அதில் திராவிட சித்தாந்த மும் ஒன்று. முன்பு இந்தியாவை ஆண்ட அரசு நமது நிலத்தை ஆக்கிரமித்த அயல் நாடுகளுக்கு தாரை வார்த்தது. 1960 போரில் இந்திய இடத்தை சீனாவிடம் தாரை வார்த்தனர். இதேபோல் கச்சதீவையும் தாரைவார்த்தனர். இதனால் நமது மீனவர்கள் அயல் நாட்டு இராணுவத்தால் சுடப்படுகிறார்கள் - என்றார்.

# விஜயின் கட்சி மாநாட்டை நடத்தாது தடுக்க முயற்சி?

சென்னை, ஓக. 16
நடிகர் விஜயின் கட்சி மாநாட் டுக்கு இடம் தர விடாமல் மிரட்டல் வருவதாக நிர்வாகி கள் தரப்பில் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

நடிகர் விஜய் கடந்த பெப்ர வரி மாதம் தமிழக வெற்றிக் கழ கம் என்ற கட்சியை தொடங்கி னார். 2026 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட [illegible] நிர்ணயித்து பல்வேறு பணி களை விஜய் மேற்கொண்டு வரு கிறார்.

இந்த நிலையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தனது கட் சியின் முதலாவது மாநாட்டை நடத்த விஜய் திட்டமிட்டுள் ளார். மதுரை, திருச்சி எனப் பல இடங்களிலும் மாநாடு நடத்த இடம் கேட்கப்பட்ட நிலையில் மாநாட்டை நடத்த பல வழிக ளில் தடங்கல் ஏற்படுத்தப்படுவ தாகவும் இதன் பின்னணியில் தமிழ்நாட்டின் பிரதான அரசி யல் கட்சி ஒன்று உள்ளதாகவும் விஜயின் கட்சி நிர்வாகிகள் குற் றம்சாட்டுகின்றனர்.

எனினும், 10 இலட்சம் பேரை திரட்டி மாநாட்டை நடத்துவ தில் நடிகர் விஜய் உறுதியாக இருக்கிறார் என்று கூறப்படுகின் றது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் ராஜபக்ஷவால் வெற்றி பெறமுடியாது!

## கூறுகிறார் பி. ஹரிசன்

கொழும்பு, ஓக. 16

**“ராஜபக்ஷக்கள் வேண்டாம் எனக் கோரியே மக்கள் போராட்டம் வெடித்தது. மாறாக போராட்டக்காரர்கள் நாமல் ராஜபக்ஷவை கோரவில்லை.”-என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர், முன்னாள் அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்தார்.**

நாமல் ராஜபக்ஷவால் இந்தத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ராஜபக்ஷ குடும்பத்துக்கு இந்நாட்டில் மீண்டும் இடமில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டனர். எனவே, நாமல் ராஜபக்ஷவால் வெற்றி பெறமுடியாது. 17 ஆம் திகதி முதல் ஜனாதிபதியின் தேர்தல் பிரசார நடவடிக்கை ஆரம்பமாகும். மக்கள் அணி திரளும்போது ரணிலுக்கான பலம் தெரியவரும்.

சம்பிக்க ரணவக்க, ஹக்கீம் மற்றும் ரிஷாத் போன்றவர்கள் கடந்த முறையும் சஜித்துடன் இருந்தனர், ஆனால் சஜித் தோற்றார். இம்முறையும் பிரதமர் பதவியை வழங்குவேன் என ஆசைக்காட்டி சம்பிக்கவின் ஆதரவை பெறுவதற்கு சஜித் முற்படலாம். இவ்வாறு மூவருக்கு பிரதமர் பதவி தொடர்பான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# சுற்றுலாத்துறையை சிறந்த வகையில் முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை!

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஓக. 16

தேசிய சுற்றுலா கொள்கையை ஏற்படுத்துவதற்காகத் தாம் பொறுப்புடன் செயலாற்றவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



தேசிய சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காகப் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

சுற்றுலாத்துறையில் அங்கம் வகிக்கும் சகலரையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தன்னிச்சையாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கான செயற்பாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதியுடன் நிறைவுறுத்தப்படும்.

சிறந்த வகையில் சுற்றுலாத் துறையை முன்கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

# வாகன விபத்துகளில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 16

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இரு வேறு விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாத்தளை ரத்தோட்ட வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில் களுதேவல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூமலர்ந்தான் சந்தியில் முச்சக்கரவண்டியொன்று விபத்துக்குள்ளானதில் அப்பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# 17 இந்திய மீனவர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஓக. 16

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக்கான இந்திய தூதரகம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவ பிரச்னை தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில், இராஜதந்திர மட்டத்தில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில், குறித்த மீனவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரூ. 350 மேலதிக கொடுப்பனவு

# முதலாளிமாருடன் ஜீவன் இனித்தான் பேசுவாராம்!

கொழும்பு, ஓக. 16


பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த வேதனம் 1,700 ரூபாய் என்று நிர்ணயித்து வர்த்தமானி வெளியாகியுள்ள போதிலும், 350 ரூபாய் மேலதிக கொடுப்பனவு தொடர்பான இணக்கப்பாடு இனித்தான் எட்டப்பட வேண்டிய நிலை இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இருந்தார்.

இதில் கருத்து தெரிவித்த அவர் 1,350 ரூபாய் அடிப்படை வேதனத்துக்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துவிட்டபோதிலும் 350 ரூபாய் என்ற உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

(அ)

# ரணில், சஜித்-சமத்துவக் கட்சி தனித்தனியாக சந்தித்து பேச்சு





கொழும்பு, ஓக். 16

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கும் சமத்துவக் கட்சிக்குமிடையில் தனித்தனியாகச் சந்திப்புகள் நடந்துள்ளன.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற இச் சந்திப்புகளில் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், கட்சியின் தவிசாளர் சு. மனோகரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இச் சந்திப்பு தொடர்பில் சமத்துவக் கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்தும் இனரீதியாகப் பல வழிகளிலும் ஒடுக்கப்படுகின்றனர். இதற்குத் தீர்வைக் காண முடியாதிருப்பது நாட்டின் தோல்வியே. அதிகாரத்தில் இருப்போரும் அதிகாரத்துக்கு வெளியே இருந்து அரசியல் செய்வோரும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். இன ஒடுக்குமுறை தொடர்வதால், பிரச்னைகளும் பாதுகாப்பற்ற நிலையும் தொடருகின்றன.

யுத்தம் முடிந்த பிறகும் தமிழ் பேசும் மக்கள் நடத்துகின்ற போராட்டங்களே இதற்குச் சாட்சி. இனியும் கால நீடிப்புச் செய்யாமல் இனப்பிரச்னைக்குத் தீர்வைக் காண வேண்டும். அதற்கான கால வரையறையும் அட்டவணையும் அவசியமாகும்.

இலங்கை பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்ற வகையில் பன்மைத்துவத்துக்கும் சுயாதீனத்துக்கும் உரியவாறு அரசியல் அமைப்பு உருவாக்கப்படுவது அவசியம்.

இனப்பிரச்னைக்குத் தீர்வைக் காணாமல் நாட்டைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவது கடினம். நாடு பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கும் பிற சக்திகளின் பிடியிலிருந்து விடுபடுவதற்கும் தீர்வு அவசியமாகும் என வலியுறுத்தப்பட்டதோடு.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமத்துவக் கட்சியின் நிலைப்பாடானது, மக்களின் கருத்தறிந்தும் வேட்பாளர்களின் நிலைப்பாட்டை அவதானித்தும் பொருத்தமான முறையில் விரைவில் எட்டப்படும்” ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இருவரிடத்திலும் சமத்துவக் கட்சி தன்னுடைய நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

பிரதான வேட்பாளர்களாக உள்ள ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திசநாயக்க ஆகியோர் ஒவ்வொரு அரசியற் கட்சிகளின் ஆதரவையும் தனித்தனியாக பெறுவதற்கே முயற்சிக்கின்றனர். இந்த உபாயத்தில் அவர்கள் வெற்றியடையவே விரும்புகின்றனர். இதைக் கூட்டாக எதிர்கொள்ளக் கூடிய அரசியல் ரீதியான ஒருங்கிணைவு தமிழ்த் தரப்பிலும் இல்லை. தமிழ் பேசும் ஏனைய சமூகங்களான மலையக, முஸ்லிம்களிடத்திலும் காணப்படவில்லை. தமிழ்பேசும் தேசிய இனச் சமூகங்கள் என்ற வகையில் கூட்டாக இந்தத் தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டும். அதுவே பிரதான வேட்பாளர்களை எமது கோரிக்கைகளை நோக்கி வளைப்பதற்கான நெருக்கடியைக் கொடுப்பதோடு, அதுவே எமது மக்களையும் பலப்படுத்தும் எனத் தெரிவித்துள்ள சமத்துவக் கட்சியினர்.

தற்போதுவரையில் ஜனாதிபதித் தேர்தலில் எத்தகைய முடிவை எடுப்பது? யாருக்கு வாக்களிப்பது? அதனால் உண்டாகும் நன்மைகள் என்ன? அதற்கான சாத்தியங்களும் உத்தரவாதங்களும் என்ன? என்ற கேள்விகளோடுதான் தமிழ்பேசும் மக்கள் உள்ளனர்.

தொடரும் இனப்பிரச்னைக்கு உரிய தீர்வை எட்டக் கூடிய திடசித்தத்தையும் அரசியல் மாற்றத்தை உண்டாக்கக் கூடிய மனவிரிவையும் எந்தப் பிரதான வேட்பாளரிடத்திலும் இன்னும் காணமுடியவில்லை.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் எதிர்பார்க்கப்படுகின்ற-தேவைப்படுகின்ற அபிவிருத்தியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் எந்த வேட்பாளரும்-வெற்றியாளரும் உடனடியாக நிறைவேற்றுவதற்கான சாத்திங்கள் குறைவே. இதை மறைத்துக் கற்பனையான வார்த்தைகள் இறைக்கப்படுவதில் நம்பிக்கை கொள்ள முடியாது.

ஒவ்வொரு சமூகத்தையும் பிரதிபலிக்கும் அரசியற் கட்சிகள் தமது நோக்கில் தீர்மானங்களை எடுத்து, அதை ஆதரிக்குமாறு மக்களைக் கோரும் நிலையே காணப்படுகிறது. அவை பொருத்தமான முடிவுகள் தானா என்று மக்கள் சிந்திப்பதையும் அவதானிக்கிறோம். ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள் ஆதரிக்கின்ற தரப்பு வெற்றி பெறலாம். அல்லது தோற்றுப்போகலாம். ஆனால், அதற்குப் பிறகும் தாம் எடுக்கின்ற தீர்மானங்களின் விளைவுகளுக்கு ஒவ்வொரு

கட்சிகளும் பொறுப்புச் சொல்ல வேண்டும். அந்தத் தார்மீகக் கடமையிலிருந்து யாரும் விலகிச் செல்லக் கூடாது-என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ், காணி அதிகாரங்களை ஒருபோதும் வழங்கமாட்டோம்!

## அடித்து சொல்கிறார் பெரமுன எம்.பி.

கொழும்பு, ஓக. 16

**"ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களும் சமமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே எமது நோக்கமாகும். பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது, ஒரே நாடு ஒரே சட்டம் என்பதே எமது முகாமின் கொள்கை." - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.**

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிரப்படுமா என ஜனாதிபதியிடம் நாம் வினவினோம், இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஆனால் எமது கொள்கை அதுவல்ல, ஒரு தேசியக் கொடி, ஒரே தேசிய கீதம் மற்றும் ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களும் இன, மத பேதமின்றி சமமான வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது,



ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற அடிப்படையிலேயே எமது செயற்பாடு அமையும். இனம் இனவாத அணி கிடையாது, தேசியவாத அணியாகும். சில வேளை ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருந்தால், தேர்தலின் பின்னர் பொலிஸ், காணி அதிகாரங்களை அவர் வழங்கிவிட்டால் நாம் என்ன செய்வது? -என்றார்.

(அ)

# அநுரவின் வெற்றி மக்களின் வெற்றி!

## கூறுகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஓக. 16

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க வெற்றியீட்டுவார். அவரது வெற்றி இந்த நாட்டு மக்களின் வெற்றியாகக் கருதப்படும்" என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில்-

தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மக்கள் அமோக வெற்றியீட்டும்.

நாட்டு மக்களின் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நாட்டை வீழ்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்றவர்களே இன்று மீண்டும் ஆட்சியமைக்கும் கனவில் உள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இந்த நாட்டில் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படும்.



அனுரகுமார திசாநாயக்கவிடம் நாட்டை ஒப்படைக்கும் போது நாடு அபிவிருத்தி அடையும்.

நாட்டு மக்கள் வளமான வாழ்க்கை வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். நாட்டை வெற்றியடையச் செய்வதற்காகவே அனுரகுமார தேர்தலில் போட்டியிடுகின்றார். செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் அநுரகுமார் திசாநாயக்க வெற்றிபெறுவார். அது இந்த நாட்டுமக்களின் வெற்றியாகும்-என்றார்.

(அ)

# பஸ் விபத்தில் 19 பேர் காயம்

கொழும்பு, ஓக. 16

அனுராதபுரம் - பாதெனிய பிரதான வீதியில் ஸ்ராவஸ்திபுர சந்திக்கு அருகில் சிசு செரிய பஸ் ஒன்றுடன் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு மாணவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் , ஸ்ராவஸ்திபுர சந்திக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிசு செரிய பஸ்ஸின் பின்புறம் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ)

# வேட்பாளரை களமிறக்க இலஞ்சம் வாங்கிய ஜனக ரத்நாயக்கவின் கட்சி செயலர் கைது!

கொழும்பு, ஓக. 16

ஜனக ரத்நாயக்கவை தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு 3 கோடி ரூபாவை இலஞ்சமாக பெற முற்பட்ட எக்சத் லங்கா பொதுஜன கட்சியின் செயலாளர் உள்ளிட்ட சிலரை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கைது செய்துள்ளது.

அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நேற்று முன்தினம் காலை கட்டுப்பணத்தைச் செலுத்திய பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க, செய்த முறைப்பாட்டுக்கு அமைய அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிக்கடை பிரதேசத்தில் உள்ள பிரபல வர்த்தக வளாகமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்த குழுவினர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுப்பணத்தைச் செலுதிய பின்னர், இலஞ்ச பணத்தைச் செலுத்த ரத்நாயக்க அங்கு சென்றிருந்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் அக்கட்சியின் முன்னாள் செயலாளரும் அக்கட்சியில் இருந்து 2015 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரும் அடங்குகின்றனர்.

(அ)

# தொலைக்காட்சி அலைவரிசைக்கு தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 16

தேர்தல் ஊடக வழிகாட்டுதல்களை மீறியதாக பிரபல தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க ஒளிபரப்பு நிறுவனத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி, அந்த அலைவரிசையின் செய்திகளுக்கு எதிராக ஆணைக்குழுவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளில், அவதூறான அறிக்கைகள் வெளியிடப்பட்ட காலை நிகழ்ச்சியின் உள்ளடக்கங்கள் குறித்து ஆணைக்குழு விவரித்துள்ளது.

குறித்த தொலைக்காட்சி அலைவரிசை ஊடக நெறிமுறைகளை மீறும் நடைமுறைகளில் ஈடுபட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்குகள் பற்றி கலந்துரையாடப்பட்டதாகவும் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரை அலைவரிசை ஊக்குவித்து வருவதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், அரசியல் கட்சிகளுக்கு எதிராக அவதூறான அறிக்கைகள் வெளியிடப்பட்டதாகவும், அதேசமயம் ஒரு கட்சி மாத்திரம் ஒளிபரப்பு வேளைகளில் தெளிவாக விளம்பரப்படுத்தப்பட் டதாகவும் ஆணைக்குழு கூறியது.

ஊடக நெறிமுறைகள் மற்றும் தேர்தல் ஊடக வழிகாட்டுதல்களை நிறுவனம் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தியது.

(அ)

# நடுத்தர வர்க்க வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம் விரைவில்!

கொழும்பு, ஓக. 16

தனிநபர் வருமான வரி எல்லையை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயாக மாற்றியமைக்க சர்வதேச நாணய நிதியத்திற்கு அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது.

இந்த வருட வரி வருவாயின் வலுவான செயல்திறன் காரணமாக, கடந்த கால வரி சீர்திருத்தங்களால் பாதிக்கப்பட்ட நடுத்தர வர்க்க வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன் இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பரிந்துரைக்குச் சர்வதேச நாணய நிதியம் திருத்தங்களை முன்மொழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# தொழிற்சங்க நடவடிக்கையில் கல்விசாரா ஊழியர்கள் சங்கம்

கொழும்பு, ஓக. 16

நேற்று முதல் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் செயலாளர் அஜித். கே. திலகரத்ன இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய கல்விசாரா சேவை கொள்கைகளை செயற்படுத்துவதாக கல்வியமைச்சர் வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். இது தொடர்பில் கல்வி அமைச்சருடன் பல தடவைகள் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதிலும் அதிகாரிகள் இதனைச் செயற்படுத்துவதற்கு தாமதித்து வருகின்றனர்.

குறித்தப் பிரச்னைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி நேற்று முதல் சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக திலகரத்ன மேலும் குறிப்பிட்டார்.

(அ)



# திலகரை வாழ்த்திய மனோ

கொழும்பு, ஓக. 16

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் வேட்புமனுவை தாக்கல் செய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வருகைதந்திருந்த போது, அங்கிருந்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அவரை வாழ்த்தினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு மரியாதை செலுத்த நாமலுக்கு வாக்களிக்களியுங்கள்!

## சமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஓக. 16

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மரியாதை செலுத்தும் வகையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு கோரிக்கை விடுப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



அம்பாந்தோட்டையில் பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் குழுவுடனான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றிய தலைவர் மகிந்த ராஜபக்ஷ என்பதோடு அவர் இந்த நாட்டில் பல அபிவிருத்திப் பணிகளைச் செய்துள்ளார்.

எனவே, மகிந்த ராஜபக்ஷவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியக்குமாறு தாம் கோரிக்கை விடுப்பதாக சமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

# அரசியல் கட்சிகள் நீர்த்துப்போயுள்ளன

கொழும்பு, ஓக. 16

நாட்டில் அரசியல் கட்சிகள் இன்று நீர்த்துப் போயுள்ளதாக முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் வலுவான அரசியல் கட்சியாக ஒரு காலத்தில் காணப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியினால் ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அந்தக் கட்சியின் தலைவருக்கு தேர்தலில் போட்டியிட ஒரு கட்சி கிடைக்கவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மறுபுறத்தில் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட மொட்டுக் கட்சியினால் வேட்பாளர் ஒருவரைத் தேடிக் கொள்ள முடியாது திண்டாடி இறுதியில் ஒரு வேட்பாளரைக் கண்டுபிடித்துள்ளது. இதன் மூலம் ஒரு விடயம் தெளிவாகின்றது எனவும், பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 பேரில் 25 பேர் கூட அடுத்த தேர்தலில் பாராளுமன்றம் செல்ல மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்த 92 உறுப்பினர்களும் கூட்டாக இணைந்து 10000 வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் விஜயதாஸ கூறினார். (அ)





# ஜனாதிபதி தேர்தலில் நாமலுக்கு ஆதரவு தெரிவித்த கோட்டபாய!

கொழும்பு, ஓக. 16

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் களமிக்கப்பட்டுள்ள நாமல் ராஜபக்ஷவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தேர்தலில் போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் வேட்பு மனுவில் கையொப்பமிடும் நிகழ்வில் கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ச குடும்பத்தினர் உள்ளிட்ட அரசியல் தரப்பினரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணில் இந்தத் தேர்தலில் வெற்றியீட்டினால் இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாகும்!

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

“ரணில் தேர்தலில் வெற்றியீட்டினால் நாடு அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும்” என ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி இந்த நாட்டின் இரண்டு வருடங்களாக ஆட்சி செய்த காலப் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு பல நிவாரண சலுகைகளையும் வழங்கியுள்ளார்.

நாட்டு மக்கள் நெருக்கடியை எதிர்கொண்ட போது மக்கள் பண்டிகைகளையும் கொண்டாட முடியாத நிலையில் இருந்தனர். ஜனாதிபதி இந்த நாட்டை பொறுப்பேற்று வரிசை யுகத்திற்கு முற்றுப் புள்ளிவைத்து மக்களின் இயல்பு வாழ்க்கையினை மீட்டுக்கொடுத்துள்ளார்.

மக்களின் நலன் கருதி 20 லட்சம் குடும்பங்களுக்கு அரிசி நிவாரணத்தையும் வழங்கியிருந்தார். பாடசாலை மாணவர்களின் நலன் தொடர்பாகவும் ஜனாதிபதி அதிக கவனம் செலுத்தியிருந்தார்.

காணி உரிமையின்றி அவதிப்பட்ட 20 லட்சம் குடும்பங்களுக்கு காணி உரிமையினையும் வழங்கி வருகின்றார். கொழும்பு நகரில் தொடர்மாடி குடியிருப்புக்களில் உள்ள 55 ஆயிரம் குடும்பங்களுக்கும் காணி உரிமை வழங்கிவருகின்றார்.



ஜனாதிபதி இந்த நாட்டை பொறுப்பேற்ற நாள் முதல் அபிவிருத்தி தொடர்பிலேயே சிந்தித்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

2 வருடங்களுக்குள் நாட்டில் இந்தளவில் மாற்றங்களை ஏற்படுத்திய ஜனாதிபதி மேலும் 5 வருடங்களுக்கு இந்த நாட்டை ஆட்சி செய்யும் போது நாடு அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றமடையும் - என்றார். (அ)

# இலங்கையிடம் உதவி கோரும் பங்களாதேஷ்

கொழும்பு, ஓக. 16

போராட்டத்தின் பின்னர் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள பங்களாதேஷை மீண்டும் ஸ்திரப்படுத்துவதற்கு ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அந்நாட்டின் புதிய பிரதமர் கோரியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள மொஹமட் யூனுசுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் அழைப்பு விடுத்த போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

பங்களாதேஷிற்கு தன்னால் இயன்ற ஆதரவை வழங்குவதாகவும் ரணில் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பங்களாதேஷில் முதலீடு செய்து நாட்டில் தங்கியுள்ள இலங்கை வர்த்தகர்களை அங்கு தங்கி தமது வர்த்தகத்தை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளதாக பங்களாதேஷ் பிரதமரிடம் அவர் மேலும் கூறினார். (அ)

# மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேறியுள்ள குப்பைகள்

## இந்திக்க அனுருத்த சாடல்


கொழும்பு, ஓக. 16

பொதுஜன பெரமுனவில் இருந்த குப்பைகள் வெளியேறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

தற்பொழுது கட்சியில் தூய்மையானவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மொட்டு கட்சியிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கச் சென்றவர்களைச் சாடும் வகையில் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் இளைஞர், யுவதிகள் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக நியமிப்பதற்கு காத்திருப்பதாக அவர் கூறினார்.



வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாற்பது வயதுக்கும் குறைந்த ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனவும், இந்த தடவை அந்த சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் இந்திக்க அனுருத்த சுட்டிக்காட்டினார். (அ)

# நாட்டில் விசர்நாய்க்கடியால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 16

விசர்நாய்க்கடி நோய் காரணமாக இந்த ஆண்டின் இதுவரையான காலம் வரை 11 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது.

விசர்நாய்க்கடி நோய் தொடர்பில் மக்களுக்கு தெளிவின்மை காரணமாகவே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளதாக அந்த பிரிவின் விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரண தெரிவித்தார்.

நாய் கடிக்கும் பட்சத்தில் உடனடியாக வைத்திய சாலைக்கு சமூகமளித்து சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் இதுவரையான காலம் வரை விசர்நாய்க்கடி நோய் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகம் என அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலை திறப்பதற்கு வவுணதீவு மக்கள் எதிர்ப்பு!

மட்டக்களப்பு, ஓக. 16

**வவுணதீவு - ஆயித்தியமலையில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த சமூக மட்ட அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச பொதுமக்கள் நேற்று வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்த ஆர்ப்பாட்டம் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகம் முன்பாக நடைபெற்றது. இதில் அந்தப் பகுதியை சேர்ந்த பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், தமிழ் கல்வி அபிவிருத்தி ஒன்றியம், சமூக மட்ட அமைப்புகளை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

திறக்கப்படவுள்ள மதுபான சாலையால் சமூகச்சீர்கேடுகள் அதிகரிக்கும் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின்போது, "மட்டக்களப்பின் அபிவிருத்தி மது பானசாலையா", "அழிக்காதே அழிக்காதே கலாசாரத்தை அழிக்காதே", "வேண்டாம் வேண்டாம் மதுபானசாலை வேண்டாம்" போன்ற கோசங்களை அவர்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் அரசாங்க அதிபர், மதுவரித் திணைக்கள அதிகாரி ஆகியோருக்கான மனு மண்முனை மேற்கு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# புளியந்தீவு மரியாள் பேராலய திருவிழா நேற்றுடன் நிறைவு!


மட்டக்களப்பு, ஓக. 16

புளியந்தீவு புனித மரியாள் பேராலய விண்ணேற்பு மாதாவின் 216ஆவது வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நேற்று வியாழக்கிழமை நிறைவடைந்தது.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் 216 ஆண்டுகள் பழமை வாய்ந்த பேராலயமான மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தின் விண்ணேற்பு மாதா பெருவிழா கடந்த 6 ஆம் திகதி பங்குதந்தை நிக்சன் அடிகளார் தலைமையில் கொடியேற்றப்பட்டு ஆரம்பமாகி நவ நாட்காலங்களில் தினமும் மாலை அருளுரைகளுடன் திருப்பலிகள் நடைபெற்றன.

ஆலய வருடாந்த திருவிழா கூட்டுத்திருப்பலி மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வர் ஜோர்ச் ஜீவராஜ் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியை தொடர்ந்து ஆலய முன்றலில் இடம்பெற்ற விசேட ஆராதனை வழிபாடுகளுடன் ஆலய திருவிழா நிறைவு பெற்றது. திருவிழா திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மறை மாவட்ட பங்கு மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



# கல்முனை தமிழ்மொழி தின போட்டிகள் நேற்று ஆரம்பம்!


கல்முனை, ஓக. 16

அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிக்கான கல்முனை கல்வி மாவட்ட போட்டி நேற்று வியாழக்கிழமை திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது .

திருக்கோவில் வலய கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார் தலைமையில் அங்குரார்ப்பண விழா கோலாகலமாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ. எம். றஹ்மத்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தமிழ் மொழி தின பண்பாட்டு ஊர்வலம் பலரும் மெச்சத்தக்க வகையில் கோலாகலமாக நடைபெற்றது. அதன் பிறகு ஏனைய நிகழ்வுகள் நடைபெற்றன. (ஐ)

# கல்முனை வர்த்தக நிலையங்களில் களப்பரிசோதனை முன்னெடுப்பு!



கல்முனை, ஓக. 16

கல்முனை மாநகர சபையின் வருமான வாரத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்கள்மீதான களப் பரிசோதனை நடவடிக்கை நேற்று முன்தினம் ஆணையாளர் என். எம். நௌபீஸ் தலைமையில் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் வின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

மூன்றாவது நாளாக நடைபெற்ற இந்தக் களப் பரிசோதனை நடவடிக்கையில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, பிரதம சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் அர்ஷாத் காரியப்பர், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், வருமான பரிசோதகர்களான ஏ.ஜே. சமீம், எம். உபைதுல்லாஹ், எம்.எம். றைஹான், சுகாதார பரிசோதகர்களான ஜே.எம். நிஸ்தார், எம். எம். பாறுக், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான நாகரத்தினம், எம்.சி.எம். நுஸ்ரத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது வர்த்தக நிலையங்களில் வியாபார அனுமதிப் பத்திரம் பரீட்சிக்கப்பட்டு, இதுவரை இந்த ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றிராத வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் அந்தப் பத்திரத்தை அவர்கள் இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக அதே இடத்தில் ஆரம்ப நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் விடயங்களும் இதன்போது பரிசோதிக்கப்பட்டு, தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ஐ)

# மாற்று ஆற்றலுடையோருக்கு சக்கரநாற்காலிகள் அன்பளிப்பு

அக்கரைப்பற்று, ஓக. 16

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தைக்கா நகர் போன்ற கிராமங்களில் மாற்று ஆற்றலுடையோருக்கு எம். ஏ. ஏ. நிறுவனத்தின் அனுசரணையில் சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நேற்று வியாழக்கிழமை நடந்த இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம் எஸ். ஜௌபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி. ரீ. எம். இர்பான் மற்றும் அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹ்ஜா முஷாபிர், எம். ஏ. ஏ. திட்ட முகாமையாளர் ஏ எல் எம். தாபித், மாவட்ட இணைப்பாளர் எப் எம். அம்ஜத் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களான ரீஎம். நசீர், எம் நுஸ்லி, முகம்மது ஆதில் மற்றும் எம். இம்ரான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




இந்த நிகழ்வில் 30 பேருக்கு சக்கர நாற்காலிகளும் 150 பேருக்கு ஊன்றுகோல்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



# கிழக்கு சுதேச மருத்துவ ஆணையரானார் நபீல்!

திருகோணமலை, ஓக. 16

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளராக வைத்தியர் எம். ஏ. நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்திருந்தார். நபீல் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் முதலாவது முஸ்லிம் மாகாண ஆணையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு அம்மை நோய் சர்வதேச அவசரகால நிலையாக அறிவிப்பு



லண்டன், ஓக. 16

**குரங்கம்மை நோயை சர்வதேச சுகாதார அவசரகால நிலையாக அறிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.**

ஆபிரிக்காவில் குரங்கம்மை நோய் வேகமாக பரவுகிறது. இதுவரை 500இற்கும் மேற்பட்டவோர் உயிரிழந்தனர். இதன்படி, நடப்பு ஆண்டில் குழந்தைகள், முதியவர்கள் என்று 13 நாடுகளில் குரங்கம்மை கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் கொங்கோ நாட்டில் 96 சதவீதம் அளவுக்கு பாதிப்புகளும் மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது, கொங்கோவில் பாதிப்புகள் 160 சதவீதமும், மரணங்கள் 19 சதவீதமும் உயர்ந்துள்ளன. இதுவரை 524 பேர் பலியாகினர். 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவித்து இருந்தது.

ஆபிரிக்க நாடுகளில் புது வடிவிலான வைரஸானது பரவி வருகிறது. கொங்கோவில் இருந்து புருண்டி, கென்யா, ருவாண்டா மற்றும் உகண்டா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளது. எனினும், ஆபிரிக்காவில் குறைந்த தடுப்பூசி மருந்துகளே இருப்பு உள்ளன.

இதுபற்றி உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் அதொனம் கெப்ரியேசஸ் கூறுகையில்,

நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விசயம். இந்த வைரஸானது ஆபிரிக்காவை கடந்து பரவ கூடிய ஆற்றல் படைத்துள்ளது என்பது அதிக வருத்தத்துக்கு உரியது - என்றார்.



# இஸ்ரேலின் தாக்குதலில் 56 பலஸ்தீனர்கள் பலி!

கொழும்பு, ஓக. 16

இஸ்ரேல் - பலஸ்தீன போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது. இந்தநிலையில், காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 56 பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர்.

கடந்த 24 மணி நேரத்தில் இந்த 56 பேரும் கொல்லப்பட்டனர் என்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை பலஸ்தீன சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேநேரம், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழப்பு 39 ஆயிரத்து 965 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், 92 ஆயிரத்து 294 பேர் காயமடைந்துள்ளனர். அதுமட்டுமின்றி சர்வதேச நாடுகளிலிருந்து நிவாரண பொருட்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமையால், காஸா மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# நாக்கை பார்த்து நோயை கணிக்கும் ஏ. ஐ. நுட்பம்!



சிட்னி, ஒக. 16

நாக்கின் நிறத்தை கொண்டு, நீரிழிவு, பக்கவாதம் போன்ற நோய்களை கணினி மூலமாக 98 சதவீதம் துல்லியமாக கணிக்க முடியும் என அவுஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவிலுள்ள மத்திய தொழில்நுட்ப பல்கலைக்கழம், தெற்கு பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து, இமேஜிங் சிஸ்டம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

இதிலுள்ள கெமராக்கள் மூலமாக சுமார் 20 சென்ரிமீற்றர் தூரத்திலிருக்கும் நோயாளியின் நாக்கை படம்பிடித்து, அதன் வடிவம், தடிமன், நிறம் ஆகியவற்றை பகுத்தறிந்து, ஆஸ்துமா, நீரிழிவு, பக்கவாதம், பித்தப்பை பிரச்சினை, கல்லீரல், கொவிட் உள்ளிட்ட நோய்களை எளிதாக கண்டறியலாம்.

சீன மருத்துவத்தில் சுமார் 2000 வருடங்கள் பழைமையான முறை இதுவாகும். இதன் பின்புலத்திலேயே இந்த ஏஐ கணினி பகுப்பாய்வு முறை உருவாக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# தாய்லாந்து பிரதமர் பதவி நீக்கப்பட்டார்



பாங்கொக், ஒக. 16

அரசமைப்பை மீறியமைக்கா தாய்லாந்து பிரதமர் ஸ்ரெத்தா தவிசின் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தில் கடந்தாண்டு ஓகஸ்ட் பிரதமராக பொறுப்பேற்றவர் ஸ்ரெத்தா தவிசின். இவரின் அமைச்சரவையில் பிச்சித் என்ற வழக்கறிஞர் சேர்க்கப்பட்டார். இவர் முன்னாள் பிரதமர் தக்சினின் உறவினர். இவர் கடந்த 2008ஆம் ஆண்டில் நீதிமன்ற அவமதிப்புக்காக 6 மாதங்கள் சிறை தண்டனை பெற்றவர். இதனால் இவரின் நியமனத்தை எதிர்த்து முன்னாள் செனட் உறுப்பினர்கள் 40 பேர் வழக்கு தொடர்ந்தனர்.

தாய்லாந்து அரசியல் சாசன நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கில் 9 நீதிபதிகள் அடங்கிய அமர்வு நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

இதில் பிரதமர் ஸ்ரெத்தா தவிசினை பதவி நீக்கம் செய்ய 5 நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

அவர்களின் தீர்ப்பில், “அமைச்சராக நியமிக்கப்பட்ட பிச்சித் ஒழுங்கீனம் காரணமாக சிறை தண்டனை பெற்றவர் என்பதை அறிந்தும், அவரை அமைச்சராக பிரதமர் ஸ்ரெத்தா தவிசின் நியமித்துள்ளார். இதன் மூலம் அரசியல் சாசனத்தின் ஒழுக்க நெறிமுறை விதிகள் மீறப்பட்டுள்ளன. இதனால் பிரதமர் ஸ்ரெத்தா தவிசின் பதவி நீக்கம் செய்யப்படுகிறார்” - என்றனர்.

# காஸா போர் நிறுத்தம் ஏற்பட்டால் ஈரான் தாக்குதலை தடுக்கமுடியும்

## இஸ்ரேலுக்கு ஜோ பைடன் அறிவுரை

வாஷிங்டன், ஒக. 16

காஸா போர் நிறுத்தம் ஏற்பட்டால் இஸ்ரேலை ஈரான் தாக்குவதிலிருந்து தடுக்க முடியும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஈரானில் ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டமையால் ஆத்திரமடைந்த ஈரான் இஸ்ரேலை பழிவாங்க துடித்துக் கொண்டிருக்கிறது. இதனால் மத்திய கிழக்கு வட்டாரம் பதற்றமான சூழ்நிலையில் உள்ளது.

இஸ்ரேலுக்கு விடுக்கும் மிரட்டலை கைவிட வேண்டும் என்று மேற்கத்தேய நாடுகள் விடுத்த அழைப்பை ஈரான் புறக்கணித்ததைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதியின் கருத்து வெளியாகியுள்ளது.



கடந்த ஜூலை 31ஆம் திகதி டெஹ்ரானில் நடந்த ஜனாதிபதி மசூத் பெஸெஷ்கியன் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இஸ்மாயில் ஹனியே சென்றபோது கொல்லப்பட்டார். இதற்கு இஸ்ரேல்தான் காரணம் என்று ஈரானும் அதன் நட்பு நாடுகளும் குற்றம்சாட்டி வருகின்றன.

இதனை இஸ்ரேல் மறுக்கவோ, ஆமோதிக்கவோ இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தேசிய கொடி விற்ற கடையில் நடந்த தாக்குதலில் மூவர் பலி!

லாகூர், ஒக. 16

பாகிஸ்தானின் தேசியக் கொடி விற்ற கடையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் - பலுகிஸ்தான் மாகாணத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 77ஆவது சுதந்திர தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதேநேரம், பிரிவினை கோரி பலுகிஸ்தான் மாகாணத்தில் பாகிஸ்தான் சுதந்திர தினத்தை கொண்டாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தடையை மீறி கடை ஒன்றில் பாகிஸ்தான் கொடிகள் விற்பனை செய்யப்பட்டன. எச்சரிக்கையை மீறி தேசியக்கொடி விற்பனை செய்த கடை மீது வீசப்பட்ட கைக்குண்டு வெடித்ததில் மூவர் உயிரிழந்தனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுக்கு பாடம் புகட்டுவோம்!

## சம்பிக்க ரணவக்க சூளுரை

கொழும்பு, ஓக. 16

**எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை தோற்கடித்து ராஜபக்ஷக்களுக்கு தக்கபாடம் புகட்டுவோம் என அறை கூவல் விடுத்துள்ளார் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களே நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்தனர். நீதிமன்ற தீர்ப்பு ஊடாகவும் இது உறுதியானது. வரிசை யுகம் உருவாகி நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளுக்கு ராஜபக்ஷக்கள் அனைவரும் பொறுப்பு கூறவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை களமிறக்கியதற்காக மகிந்த ராஜபக்ஷவுக்கு நாம் நன்றி கூறவேண்டும். ஏனெனில் மொட்டுச் சின்னத்தில் களமிறங்கும் நாமலைப் படுதோல்வி அடைய செய்து எமது கோபத்தை, வைராக்கியத்தை வெளிப்படுத்துவதற்குரிய ஜனநாயக வாய்ப்பு உதயமாகியுள்ளது.

எமது நாடு ஜனநாயக நாடு, பங்களாதேஷ் போன்று இங்கு தீர்மானம் எடுக்கவேண்டும், ஜனநாயக வழியில்தான் தீர்மானம் எடுக்க வேண்டும். அந்தவழியில் மொட்டு கட்சியை பூச்சிய நிலைக்கு கொண்டுவருவோம். 2022 மே 9 மற்றும் ஜூலை 9 ஆம் திகதிகளில் கற்றுக்கொள்ளாத பாடத்தை செப்ரெம்பர் 21 ஆம் திகதி மஹிந்தவுக்கு கற்பிப்போம்-என்றார்.

(அ)

# வவுனியாவில் 2,85,000 ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்ட மாம்பழம்!

வவுனியா, ஓக. 16

வவுனியா, உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவின்போது மாம்பழமொன்று 2,85,000 ரூபாய்க்கு ஏலத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

உக்குளாங்குளம் சிறீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ உற்சவத்தின் 06ஆம் நாளான நேற்று முன் தினம் மாம்பழத் திருவிழா நடைபெற்றது.



இதன்போது விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழமொன்றே ஆலயத்தின் வளர்ச்சி நிதிக்காக இவ்வாறு ஏலத்தில் விடப்பட்டது.

இந்நிலையில் பலத்த போட்டிக்கு மத்தியில் குறித்த மாம்பழத்தை உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் ஒருவர் 2,85,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவன் மாயம்!

கொழும்பு, ஓக. 16

கண்டி பாடசாலையொன்றில் கல்வி கற்கும் 15 வயது மாணவன் ஒருவர் பாடசாலைக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பாமை தொடர்பில் அவரது தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ரணவன பிரதேசத்தைச் சேர்ந்த மாணவனே இவ்வாறு காணாமல்போயுள்ளார். சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த மாணவன் நேற்று முன் தினம் காலை 6.00 மணியளவில் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்றதாகவும் அதன் பின்னர் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து 408 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஓக. 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 408 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிக்கப்பட்ட தினம் முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் பதிவானவற்றில் வன்முறைச் சம்பவமொன்றும் தேர்தல் சட்டத்தை மீறிய 392 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து வேட்புமனு தாக்கல் செய்யும் நாள் வரையிலான காலப்பகுதிக்குள் பதிவாகும் தேர்தல் வன்முறைகளின் எண்ணிக்கையானது கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவிலேயே காணப்படுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மாற்றுத்திறனாளிகள் தற்காலிக அ.அட்டையை தேர்தலில் வாக்களிப்பதற்கு பயன்படுத்தலாம்!

கொழும்பு, ஓக. 16

மாற்றுத்திறனாளிகள் தமக்கு வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு பயன்படுத்த முடியும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் வாகன அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஓய்வூதியம் பெறுபவரின் அடையாள அட்டை ஆகியவற்றை பயன்படுத்தலாம். இது எதுவுமே இல்லாதவர்கள் தங்கள் கிராம அலுவலருடன் தேர்தல் அலுவலகத்திற்குச் சென்று தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம். இம்முறை தற்காலிக அடையாள அட்டையை வழங்கியுள்ளோம். மாற்றுவலுவுள்ளோர் சமூகம் அவர்களுடைய தற்காலிக அடையாள அட்டையை பயன்படுத்த முடியும்-என்றார்.

(அ)

# ரணிலை ஆதரிக்கும் அதாவுல்லா

கொழும்பு, ஓக. 16

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லாவும் அவர் தலைமையிலான தேசிய காங்கிரஸும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

அதாவுல்லா மற்றும் அவரது பிரதிநிதிகள் நேற்று முன் தினம் ஜனாதிபதியை சந்தித்து தமது ஆதரவை உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

நாட்டின் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் ஜனாதிபதியின் அணுகுமுறை குறித்து நம்பிக்கை தெரிவித்த அவர், பொருளாதார மற்றும் அரசியல் சவால்களுக்கு தீர்வு காண்பது மிகவும் முக்கியமானது என்றும் வலியுறுத்தினார்.

இச்சந்திப்பின் போது தேசிய காங்கிரஸினால் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான ஆலோசனைகள் அடங்கிய பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது.

(அ)

# தேர்தல் பிரசாரங்களுக்காக பொலித்தீன் பயன்படுத்தாதீர்!

## தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஓக. 16

2024 ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளின் போது பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்க்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் கோரிக்கை மற்றும் 2017 செப்டம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட தடையை கருத்தில் கொண்டு இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் தேதி நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மொத்தம் 39 வேட்பாளர்கள் வேட்புமனுக்களை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மனுஷவின் இடத்துக்கு பந்துல லால் நியமனம்!

## வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஓக. 16

மனுஷ நாணயக்காரவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பந்துல லால் பண்டாரிகொடவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்கு பந்துலால் பண்டாரிகொடவை நியமிக்கத் தீர்மானித்து அவரின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல் ஆணைக் குழுவுக்கு அனுப்பியிருந்தது.

இந்த நிலையில் பந்துல லால் பண்டாரிகொடவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில், மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டபூர்வமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னணியில் குறித்த இருவரும் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்தனர் என்பது ஏலவே அறிந்தததே.

# மியன்மாரில் 20 இலங்கையர் மீட்பு!

கொழும்பு, ஓக. 16

மியன்மாரின் சைபர் கிரைம் வலயத்தில் சிக்கியிருந்த மேலும் 20 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த இலங்கையர்கள் தற்போது தாய்லாந்தின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பாதுகாப்பில் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மியன்மாரின் சைபர் கிரைம் வலயத்தில் சுமார் 56 இலங்கையர்கள் வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்ட நிலையில், அவர்களில் 8 பேர் கடந்த மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டனர். மியன்மாரின் சைபர் கிரைம் வலயத்தில் மேலும் 28 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்வில் இலங்கை இராணுவத்தை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவர் அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து, இந்திய தேசியக் கொடியை அவர் ஏற்றி வைத்தார்.

பின்னர், இந்திய ஜனாதிபதியின் உரையை துணைத்தூதுவர் சாய் முரளி வாசித்தார்.

இந்த நிகழ்வுகளில் துணைத்தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், அரசியல் வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேநேரம், இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடந்த நிகழ்வு ஒன்றிலும் இந்தியத் தூதுவர் பங்கேற்றிருந்தார். (ஐ)

## நாகபட்டினம்...

நாட்களிலும் நாகபட்டினத்திலிருந்து காலை 8 மணிக்கு புறப்படும் கப்பல் நண்பகல் 12 மணிக்கு காங்கேசன் துறையை வந்தடையும். பின்னர் இங்கிருந்து 2 மணிக்கு புறப்பட்டு மாலை 6 மணிக்கு நாகபட்டினத்தை சென்றடையும்.

சிவகங்கை கப்பலில் சாதாரண வகுப்பு இருக்கை ஒன்றுக்கு 5 ஆயிரம் இந்திய ரூபாயும் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 17 ஆயிரத்து 800 ரூபாய்) சிறப்பு வகுப்பு இருக்கை ஒன்றுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாயும் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 26 ஆயிரத்து 700 ரூபாய்) கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மேலும் பயணி ஒருவர் 60 கிலோ பொதிகளை தம்முடன் எடுத்துச் செல்ல முடியும். அத்துடன், பயணி தனது கைப்பையில் 5 கிலோ பொருட்களை கொண்டு செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிவகங்கை கப்பல் கடந்த 10ஆம் திகதி பரீட்சார்த்த ஓட்டமாக காங்கேசன்துறைக்கு வந்து நாகபட்டினத்துக்கு திரும்பியிருந்தது.

முன்னதாக, இந்த இரு துறை முகங்களிடையே 1982ஆம் ஆண்டுவரை படகு சேவை நடைபெற்று வந்தது. உள்நாட்டு போரைத் தொடர்ந்து இந்த சேவை நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், 41 வருடங்களின் பின்னனர் - கடந்த ஆண்டு ஒக்ரோபர் 14ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடி மெய் நிகர் வழியே கப்பல் சேவையை ஆரம் பித்து வைத்தார். எனினும், தொழில் நுட்ப கோளாறு மற்றும் கடல்சீற்றம் காரணமாக இந்தக் கப்பல் சேவை தடைப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போட்டிக்...

வேட்புமனு தாக்கலின் பின்னர் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நடத்திய ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

மேலும், வேட்பு மனுத்தாக்கல் நிறைவடைந்துள்ளது. அனைவருக்கும் நன்றி. நீதியான முறையில் தேர்தலை நடத்த வேட்பாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். தாக்கல் செய்யப்பட்ட 39 வேட்பு மனுக்களில் 3 வேட்பு மனுக்கள் மீது முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

சமூக வலைத்தளங்கள் ஊடாக தவறான மற்றும் வெறுப்பூட்டும் சித்தரிப்புகளுடனான பிரசாரங்களை மேற்கொள்வதை அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் விசேட சலுகை வழங்கும் ஊடகங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்.

வேட்பாளர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில்கொண்டு தேர்தல் பிரசாரங்களுக்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் ஆகியவற்றை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## எதிர்பார்க்கும்...

எங்களால் இந்தத் தேர்தலில் வெற்றி பெற முடியும். இந்தத் தேர்தலை மக்களை துன்பத்திலிருந்து மீட்பதற்காக - காப் பாற்றுவதற்காக எங்களால் பயன்படுத்த முடியும் - என்றார்.

நேற்று வேட்புமனுத் தாக்கலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அநுரகுமார மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## பொதுமக்களின்...

தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், பொதுமக்கள் என்னுடன் அணி இணையுங்கள் என்றும் அழைப்பு விடுத்தார். (ஐ)

## 21இல்...

செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இதற்கமைய, எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2366/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மற்றும் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2387/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வர்ள்ட் லய்ப் லய்ன் யோகா நிறுவனம் (கூட்டிணைத்தல்) தனியார் உறுப்பினர் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்காக பிரேரிக்கப்பட்டு சட்டவாக்க நிலையியல் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான இரண்டு வினாக்களுக்கு நேரம் ஒதுக்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புலிகள்...

அந்த அறிக்கையில், உலகத் தமிழர் இயக்கத்துடன் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக நீடிக்கும் கனடா அரசின் முடிவை இலங்கை அரசாங்கம் வரவேற்கிறது.

அண்மைய மதிப்பாய்வின்படி, விடுதலைப் புலிகளின் எச்சங்கள் சர்வதேச நிதி சேகரிப்பு, கொள்முதல் வலையமைப்பை கொண்டுள்ளதாகக் கனடா கூறுகிறது. புலிகள் சார்பாக நிதி சேகரிப்பில் உலகத் தமிழர் இயக்கம் செயல்படுகிறது.

மீளாய்வு செயல்முறைக்கு பின்னர் எடுக்கப்பட்ட இந்த முடிவு குறித்த அமைப்புகளால் தொடர்ந்து அச்சுறுத்தலை மீண்டும் உறுதிப்படுத்துகிறது - என்றும் குறிப்பிட்டுள்ளது.

2006 ஏப்ரல் 06 ஆம் திகதி குற்றவியல் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக கனடா அரசாங்கம் முதன்முதலில் பட்டியலிட்டது. மேலும், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்வது சட்டப்பூர்வ தேவையாகும். அண்மைய மதிப்பாய்வு 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நிறைவடைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக கனடா அரசாங்கம் தொடர்ந்தும் மூன்றாவது முறையாக பட்டியலிட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியாவிலும் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கைலாகு கொடுத்த ரணில் அமர்ந்தபடி கும்பிட்ட சஜித்

கொழும்பு, ஒக. 16

தேர்தல் திணைக்களத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கைலாகு கொடுதார். ஆனால், அவர் தனது இருக்கையில் அமர்ந்திருந்தவாறே ரணில் விக்கிரமசிங்கவை கும்பிட்டார். இதையடுத்து ரணில் பதில் வணக்கம் செலுத்திவிட்டு சென்றார்.

இந்தச் சம்பவம் நேற்று தேர்தல்கள் திணைக்களத்தில் வேட்புமனு தாக்கல் செய்வதற்காக வேட்பாளர்கள் கூடிய போது இடம்பெற்றிருந்தது. (ஐ)

# போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, ஒக. 16

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஊறுகொடவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 150 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதுடன், சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து 12 கிராம் 720 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் 98,700 ரூபாவும் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35 மற்றும் 53 வயதுடைய ஊறுகொடவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# யுக்தியவில் 754 பேர் கைது

கொழும்பு, ஒக. 16

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 754 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 743 ஆண்களும் 11 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 20 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 03 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 177 கிராம் 48 மில்லி கிராம் ஹெரோயின், 765 கிராம் 035 மில்லி கிராம் ஐஸ், 1,040 கிராம் 154 மில்லி கிராம் கஞ்சா, 220 போதை மாத்திரைகள் மற்றும் 16,706 கஞ்சா செடிகள் ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## சங்கு...

பொதுக் கட்டமைப்பின் ஆதரவில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கும் பா. அரியநேத்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுகிறார். அவரின் சின்னம் சிலிண்டர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு சுயேச்சை வேட்பாளரான சரத் பொன்சேகா லாம்பு (லாந்தர்) சின்னத்தில் போட்டியிடவுள்ளார்.

## பேரம்...

இனத்தின் குறியீட்டு வேட்பாளரா கவே போட்டியிடுகிறேன் - இவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரிய நேத்திரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளி யிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “கடந்த காலங்களில் நாம் தென்னிலங்கை ஜனாதிபதிகளிடம் ஏமாந்துவிட்டோம். முள்ளிவாய்க்காலின் பின்னர் 3 ஜனாதிபதிகளிடம் பேரம்பேசி ஏமாந்தோம். இனியும் நாம் ஏமாறத் தயாரில்லை - என்றார்.

“தமிழ் மக்களின் வாக்குகளை சிதற டிக்கும் நோக்கிலா தேர்தலில் போட்டி யிடுகிறீர்கள்?”, என்று ஊடகவியலாளர் கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

நாங்கள் வாக்குகளை சிதறடிக்க வில்லை. கடந்த காலங்களில் அவர் கள்தான் எங்களை சிதறடித்தார்கள். 9ஆவது ஜனாதிபதியாவது இதனை புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே நான் போட்டியிடுகிறேன் - என்றார். (ஐ)

## மகாநாயக்க...

பின்னர் மல்வத்து மகா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் சிரீ சுமங்கல தேரரின் ஆசீர்வாதத்தைப் பெற்று அவருடன் உரையாடினார். தொடர்ந்து, அஸ்கிரிய மகா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொடை சிரீ ஞானரத்ன தேரரிடம் ஆசி பெற்றார். (ஐ)

## தேர்தல்...

விஜயதாஸ ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை நடைபெற்றது.

வேட்புமனுவை கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே தேர்தல்கள் ஆணைக்குழுமீது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கடந்த காலங்களில் தேர்தல்கள் ஆணைக்குழு நீதிமன்றத்தை போன்று ஒழுக்கத்தை பேணியிருந்தது. ஆனால், இன்று கிராமத்தில் உள்ள தேநீர் கடையொன்றை போல் இருந்தது - என்றார்.

மேலும், “நாட்டின் முதல் குடிமகனாக வேண்டும் என்று எதிர்பார்த்தவர்களின் நடத்தை வருந்தத்தக்கது. ஒரு வேட்பாளரை ஊக்குவிப்பதற்காகவே போலி வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். ஒரு வேட்பாளருடன் 15 முதல் 20 பேர் வரை வருகை தந்திருந்த னர்.

ஒழுக்கத்தை பேணுமாறு மக்களை கேட்பதற்கு முன்னர், நாம் முன்மாதிரியாக செயல்பட வேண்டும். இன்றைய (நேற்று) தினம் வேட்பாளர்களை கட்டுப்படுத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு ஒழுக்கத்தை பேண தவறியுள்ளது.” - என்றும் சொன்னார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று அமைச்சுகள் ஜனாதிபதியின் கீழ்!

கொழும்பு, ஒக. 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் மூன்று அமைச்சுப் பதவிகளை வைத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, சுற்றுலா மற்றும் காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் முன்னர் இந்த அமைச்சுப் பதவிகளை வகித்து வந்த நிலையில், அவர்களின் பதவிகளை இழந்தமையால் அமைச்சுப் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

இதன்படி, இந்த அமைச்சுப் பதவிகளை தனது பொறுப்பில் எடுத்து ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (அ)

## வேலுகுமார் எம்.பி. ரணிலுக்கு ஆதரவு!



கொழும்பு, ஒக. 16

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, பிளவர் வீதியில் உள்ள அவரது தேர்தல் அலுவலகத்தில் சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்தார்.

வேலுகுமார் எம்.பி., ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவராகவும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முக்கியஸ்தராகவும் செயற்படுகின்றார்.

## கொழும்பில் இந்திய சுதந்திர தினம்



கொழும்பு, ஒக. 16

இந்தியாவின் 78ஆவது சுதந்திர தினம் நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் கொழும்பில் நடைபெற்ற இக் கொண்டாட்டங்களின் பிரதான நிகழ்வு இந்திய தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது இந்திய தேசியக்கொடியை ஏற்றிவைத்த இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா அணிவகுப்பு மரியாதையினையும் பார்வையிட்டார். அத்துடன் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவரால் நாட்டு மக்களுக்காக ஆற்றப்பட்ட உரையின் சுருக்கங்களும் தூதுவரால் இச்சந்தர்ப்பத்தில் வாசிக்கப்பட்டது. (அ)

# ஸ்திரமடைந்துவரும் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்லவேண்டும்

### தம்மை ஆதரிக்குமாறு ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, ஒக. 16

**எரிபொருள், எரிவாயும் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இல்லாது கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்தோம். இன்று அந்த நிலையிலிருந்து மீண்டுவருகிறோம். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் எமது திட்டங்களை முன்னோக்கிக் கொண்டுசெல்வதன் ஊடாகவே நெருக்கடியிலிருந்த விடுபட முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நேற்று வியாழக்கிழமை வேட்புமனுவை தாக்கல் செய்யப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க-

2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி செயலகத்தையும், அலரிமாளிகையும், ஜனாதிபதி மாளிகையையும் கைப்பற்றினர். எனது வீட்டை தீயிட்டனர். அப்படியான ஒரு சூழலில்தான் நான் நட்டை பொறுப்பெற்றேன்.

நாட்டை கொண்டுசெல்ல முடியாதென அனைவரும் கூறினர். ஆனால், நானும், சபாநாயகரும், முப்படையினரும் இணைந்து பாராளுமன்றத்தை கைப்பற்ற சந்தர்ப்பம் அளிக்கவில்லை. அதனால்தான் இந்த தேர்தல் இன்று நடைபெறுகிறது. இல்லாவிட்டால் இன்ற எமது நாடு பங்களாதேஷ் அல்லது ஆப்கானிஸ்தான் போன்று ஆகியிருக்கும்.

2022ஆம் ஆண்டு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்தோம். எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்ள முடியாது மக்கள் வரிசையிலிருந்த யுகத்துக்கு முடிவு கட்டியுள்ளோம்.

ஏற்பட்டுள்ள இந்த ஸ்திர நிலையை முன்னோக்கி கொண்டு செல்வதன் ஊடாகவே நாம் வெற்றிபெற முடியும். அதற்காக மக்கள் தம்மை ஆதரிக்க வேண்டும்- என்றார். (அ)

## யாழ். மந்திரிமனையை புனரமைப்பது குறித்து வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஒக. 16

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோவிலை அண்மித்து அமைந்துள்ள மந்திரி மனையை புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடத்தப்பட்டது.

வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள், யாழ். மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், மடம் அறக்கட்டளையின் பொறுப்பாளர் உள்ளிட்டோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண இராசதானி காலத்துக்குரியதாக கருதப்படும் மந்திரி மனை, பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் சின்னமாக 2011 ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. எனினும், மந்திரி மனை அமைந்துள்ள காணி மடம் அறக்கட்டளைக்கு சொந்தமானதாக காணப்படுகிறது.

இந்நிலையில் மந்திரிமனையை புனரமைப்பதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், கலந்துரையாடலில் உரிய தீர்மானங்கள் எட்டப்படாமையால் காலதாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இவ்விசேட கலந்துரையாடலின் போது சில விதிமுறைகளுக்கு உட்பட்டு மந்திரி மனையை புனரமைத்து பாதுகாப்பதற்கு மடம் அறக்கட்டளை பொறுப்பாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் திணைக்களத்தின் திட்ட முன்மொழிவுக்கு அமைய, திணைக்கள மேற்பார்வையுடன் அறக்கட்டளையின் நிதியில் மந்திரி மனையை புனரமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டுக்கு அமைய தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான கோரிக்கை அடங்கிய கடிதம் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

## தேர்தல் அச்சுப் பணி இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஒக. 16

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய அச்சுப் பணிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப் படவுள்ளதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்தார்.

நேற்று வேட்புமனு தாக்கல் நிறைவடைந்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்ததன் பின்னர் அச்சுப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், வாக்குச்சீட்டில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் தொடர்பில் அரச அச்சகரிடம் வினவியபோது, 2019ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இடம்பெறாது என தெரிவித்தார். (அ)

## முதன்முறையாக வாக்களிப்பதற்கு ஒரு மில்லியன் பேர் இம்முறை தகுதி!

கொழும்பு, ஒக. 16

2024 வாக்காளர் பட்டியலின் பிரகாரம், முதன்முறையாக வாக்களிப்பதற்கு ஒரு மில்லியன் பேர் இம்முறை தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேர்தல்கள் ஆணைக்குழுவில் அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் பொலிஸார் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org